# அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

## “ சைவ சித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் ”

# ஆய்வடங்கல்

**ISC**
**2017**

21, 22,23 - ஏப்ரல் - 2017
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2017
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புத் துறத்தல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# சைவசித்தாந்தக் கருத்தியல் - நாடகபாட வழிவில் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் உயிரிளங்குமரன் நாடகம்

க. நவதர்ஷனி

**ஆய்வுச்சுருக்கம்**

*சமயத்திற்கும் நாடகத்திற்குமிடையிலான தொடர்பு புராதனமானது. இலத்திரனியல் ஊடகங்களின் வருகைக்குமுற்பட்ட காலங்களில் சமயக் கருத்துக்கள்குறிப்பாகசைவசித்தாந்தக் கருத்துகள் மக்களிடையே அறிவூட்டப்படுவதற்கு நாடகமும் அரங்கும் பெரிதும் பங்காற்றியுள்ளன. 19ஆம் நூற்றாண்டில் சைவ சமயத்தின் இருப்பு இத்தகைய நாடகங்களினால் நிலைநிறுத்தப்பட்டது எனலாம். அதிலும் குறிப்பாக பாடசாலைபாடவிதானத்திற்கு அப்பாற்சென்று ஒரு கல்விச் செயற்பாட்டாளராகவும் அரங்கியலாளராகவும்செயற்பட்ட நவாலியூர் சோமசுந்தரப்புலவரால் உயிரிளங்குமரன் எனும் நாடகம் 1927ஆம் ஆண்டு எழுதி 1936 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நாடகம் புலவர் அவர்களாலேயே தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி கொழும்பிலும் மேடையேற்றப்பட்டது. நவாலி அட்டகிரி முருகன் கோவிலில் இந்நாடகம் மேடையேற்றப்பட்ட பொழுதே இவருக்கு புலவர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்நாடகம் சைவசித்தாந்த கருத்தியலை மாணவர்களுக்கு எளிமையாக விளக்கிக்கூறும் நோக்கோடு எழுதப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களால் ஆற்றுகையும் செய்யப்பட்டது. இது ஒருவகையில் கல்வியியல் அரங்காக பயன்படுத்தப்பட்டுள்ளமையும் முக்கியமானதாகும். அதாவது சோமசுந்தரப்புலவர் தனது படைப்புகளில் பெரும்பாலானவை பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்டு எழுதப்பட்டவை ஆகும். பாடசாலைபாடத்திட்டங்களிற்கு அப்பாற்சென்று உள்ளூர் அறிவு மற்றும் கலாசார விழுமியங்களை மாணவர்களுக்கும் மக்களுக்கும் எளிமைப்படுத்தி அறிவூட்டும் ஒரு முயற்சியின் விளைவே இந்நாடகத்தின் உருவாக்கம் எனக்கொள்ளலாம். சைவசித்தாந்தம் கடவுள், உயிர், உலகம் (பசு, பதி, பாசம்) என்பனவற்றிற்கிடையிலான தொடர்பினை விபரிக்கிறது. இச்சைவசித்தாந்தக்கருத்துககளை எளிய தமிழில் இலகுவாகப்புரிந்து கொள்ளத்தக்க வகையில் உருவாக்கும் பல இலக்கியவடிவங்கள் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தன. ஆணவம், கன்மம், மறுபிறப்பு பற்றிமக்களிடயே சாதாரணமாகப்பயிலப்படும் கதையாடல்கள் சைவசித்தாந்தம் மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கியதாக எடுத்துச்செல்லப்பட்டமைக்குச் சான்றாகும். இவ்வாய்வு உயிரிளங்குமரன் எனும் நாடகத்தின் மூலக்கூறுகள் எவ்வாறு சைவசித்தாந்தக்கருத்தியலை பிரதிபலிக்கின்றது,சைவசித்தாந்தக் கருத்துகளுக்கு எவ்வாறு காட்சி அனுபவம் சார் பரிமாணம் கொடுக்கப்பட்டுள்ளது, நாடகத்தின் பேசுபொருளின் சமூகப்பெறுமானம் என்பன தொடர்பாக ஆராய்கிறது. சோமசுந்தரப்புலவர் வெறுமனே ஒருபாடசாலை ஆசிரியராய் கற்பித்தல் மட்டுமின்றி ஓர் ஆசிரிய-செயற்பாட்டாளராக மக்களிடம் பாடல்கள் மூலமும், பத்திரிகை மற்றும் நாடகத்தின் மூலமும் மக்களிடம் சைவசித்தாந்தக் கருத்துக்களை பிரபல்யப்படுத்தினார். காலனித்துவசெல்வாக்கிற்குட்பட்டிருந்த சமூகம் நிலைமாறு காலத்தில் தனது தனித்துவமான அடையாளங்களைத் தக்கவைத்துக் கொண்டது என்பது தொடர்பான அறிதலிற்கு உயிரிளங்குமரன் எனும் நாடகம் பற்றிய உசாவல் பெரிதும் உதவும்.*

**திறவுச் சொற்கள்:** கல்வியியல் அரங்கு.சைவசித்தாந்த கருத்தியல். கட்புல அனுபவம்

*முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*
*navadharshanik@univ.jfn.ac.lk*

**அறிமுகம்**

மானுடகலாசாரத்தின் தோற்றப்பாடுகளை உருவாக்குவதில் கல்வி முக்கியபங்கு வகிக்கிறது. சமூகத்தின் தேவைக்கேற்ப கல்வி முறைமை அவ்வப்போது வடிவமைக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையிலேயே நவாலியூர் சோமசுந்தரப்புலவர் படைப்புகள் கவனிப்பிற்குரியவையாகின்றன. சோமசுந்தரப் புலவர் எனும் ஆளுமை உருவாக்கத்தின் பின்புலத்தினை அறிந்து கொள்ளல் மிகவும் முக்கியமானதாகும். இவரது படைப்புகள் அனைத்துமே காலனித்துவப் பாடத் திட்டத்தினால் கவனம் செலுத்தாத உள்ளூர் அறிவு பற்றிய அறிவூட்டல்களே ஆகும். குறிப்பாக இவரால் எழுதப்பட்ட சிறுவர் இலக்கியங்கள் முக்கியமானவை. அதாவது பாடசாலைகளில் உள்ளூர் பற்றிய அறிதலை மாணவர்களுக்கு இவரது படைப்புகள் வழங்கியது.

19ஆம் நூற்றாண்டில்நானூறு ஆண்டுகளின் தொடர்ச்சியான காலனித்துவத்தின் செல்வாக்கு உள்ளூர் சமூகங்களில் பெருமளவு பாதிப்புகளைச் செலுத்தியிருந்தது. கிறிஸ்தவ மதப்பரம்பலூடாகவும். கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் தோற்றங்களும் உள்ளூரில் பல பண்பாடு, கலாசாரம் சார்ந்த விழுமியங்களில் அதிக தாக்கம் செலுத்தின. இதேவேளையில் சைவசமயம் சார்ந்த கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு சைவசமய விழுமியங்கள் அப்பாடசாலைகளில் பயிலப்பட்ட வந்தது. இக் காலத்தில் பாதிப்பு ஊடகத்தின் பெருவளர்ச்சியும் கிறிஸ்தவம், சைவம் ஆகிய இருமதங்களும் தமது கருத்துக்களை மக்களுக்கு சென்றடையும் வகையில் எளிமையான மொழிநடையில் எழுதத் தொடங்கினர். இவ்வகையில் ஊடகங்களில் காலனியகாலத்தில் சுதேச இனம் தனது இருப்பினை உறுதிசெய்து கொள்வதற்கு மக்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் சைவ சித்தாந்தம் மற்றும் உள்ளூர்ப்பண்பாடுகளையும் எடுக்காட்டும் பல படைப்புக்கள் 19ம் நூற்றாண்டில் தோன்றின.

இந்தவகையில் தங்கத்தாத்தா என பிரபல்யமாக அறியப்படும் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் வன்னிய சேகரமுதலியார் மரபைச்சேர்ந்த கதிர்காமர் மற்றும் இலக்குமிப்பிள்ளை ஆகியோருக்கு மகனாக 1878ஆம் ஆண்டு ஆனிமாதம் 12ஆம் திகதி பிறந்தார். சோமசுந்தரப்புலவர் தனது ஐந்தாவது வயதில் குருகந்தநயினாரால் நடாத்தப்பெற்ற பாடசாலையில் அருணாசலம் என்பவரிடம் தமிழ் அறநூல்கள் மற்றும் சைவத்திருமுறைகள் மற்றும் வரலாறு, புவியியல் ஆகியனவற்றைக் கற்றார். புலவர் அவர்கள் தனது 10வயதில் சமயதீட்சை பெற்றுக்கொண்டார்.

இவரது தந்தையாரது துாண்டுதலினால் பல சந்தவேறுபாடுகளுடைய பாடல்களை சிறுவயதிலியருந்தே இயற்றத்தொடங்கினார். மரபு இலக்கியக்கல்வி, ஆங்கிலக்கல்வி மற்றும் தன்சமகாலத்து அறிஞர்களுடனான தொடர்பு ஆகியன சோமசுந்தரப்புலவரை பெரும் இலக்கிய ஆளுமையாக நிலைநிறுத்தியது. தொடர்ந்தும் பல அறிஞர்கள் தொடர்பினால் தனது அறிவினை விரித்துக்கொண்டார். இராமலிங்க உபாத்தியாயரிடம் திருவா தவூரடிகள் புராணம், பருத்தித்துறை தாமோதரம்பிள்ளை மற்றும் கோப்பாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயரிடம் சிவ ஞானசித்தியார்போன்ற சைவசித்தாந்த நூல் களைக் கற்றார்.

சோமசுந்தரப்புலவர் 1899ல் சின்னத்துரை என்பவரால் நடாத்தப்பட்ட பாடசாலையில் இணைந்து கொண்டார். தற்போது இப்பாடசாலை இன்று

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூாி என அழைக்கப்படுகிறது. இங்கு 40 வருடங்கள் பணியாற்றினார். மாணவர்களுக்கும் மக்களுக்கும்தம்வாழ்வினை தனது சூழலினைப் புரிந்து கொள்ளும் வகையில் படைப்புக்கள் அமைந்தன. 1500 பாடல்களிற்கு மேலதிகமாக பாடல்களை எழுதியுள்ளார். சமூக சிந்தனை மிக்க பாடங்களிற்கு உதாரணமாக:
கோவில்களில் பலியிடலை எதிர்த்து ஆடு கதறியது எனும் தலைப்பில் பலியிடலிற்கு எதிரான பிரசாரப் பாடலை எழுதினார். அத்துடன் தாலவிலாசம், பனைமரக் கும்மி சுகாதாரக்கும்மி என்பன தேசிய சமூக உணர்வு மிகுந்த கவிஞர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

பிரபல்யமான சைவக்கோவில்கள்மீது பாடல்கள் பாடியுள்ளார். அதாவது அன்னிய ஆக்கிரமிப்புக்கள் நிகழும் பொழுதெல்லாம் நாயன்மார் காலம் முதற் கர்நாடகசங்கீத வாக்கேயக் காரர்களைக் கொண்டு பாடல் வடிவில் (text/ghlkhf) ஆலயங்களைப் பதிவு செய்யும் மரபு இருந்து வருகிறது. அவ்வகையில் புலவரும்கல்லுண்டாய்வெளி, நரசிங்கவைரவர், கதிரமலை வேலவர், மருதடி விநாயகர், நவாலி அட்டகிரி முருகன், நல்லூர் முருகன், மாவிட்டபுரம் முருகன், களயோடை அம்மன், சங்குவேலி விநாயகர், மலேசியா கோலாலம்பூர் முருகன் முதலிய கோவில்கள்மீது பாடியுள்ளார்.

ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள தனது சமகாலத்து அறிஞர்களிடமும் தொடர்பு களைப்பேணினார். தமிழ் நாட்டில் வாழ்ந்த மறைமலைஅடிகள் முதலியோரிடம் தொடர்பு கொண்டிருந்தார். சோமசுந்தரப்புலவரது பாடல்கள் அருணாசலகவிராயர், கந்தசாமிக விராஜர், மறைமலைஅடிகள் என்போரால் புகழ்ந்துரைக்கப்பட்டது. பாரதியாரின் பாடல் களை ஈழத்தில் பிரபல்யப்படுத்து வதற்கு பெரும் பங்காற்றியவர். பாரதி விழாவின் தலைவராக இருந்து பாரதி பாடல்கள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமடைவதற்கு பணியாற்றியுள்ளார். மேலும் பெங்களூரில் இருந்து வந்த சுப்பிரமணியசுவாமியார் எனும் சித்தர் இவருக்குகுருவானார். இதன் பின்பே சைவசித்தாந்தம் பற்றி மிக ஆழமானதேடல் இவருக்கு ஏற்பட்டது. சைவசித்தாந்தத்தை பொருளாகக்கொண்டு பல நாடகங்களையும் பாடல்களையும் எழுதியுள்ளார்.

இது ஒரு உயிரிளங்குமரன் எனும் நாடக பாடத்தினை (dramatic text) அடிப்படையாகக் கொண்ட ஆய்வாகும். அரங்கு என்பது உருவகபடிமம் (metaphorical reality of image) என்ற வகையில் நாடகத்தின் மூலக்கூறுகளான கரு, கதைப்பின்னல், மொழி பெருங்காட்சி (spectacle) மற்றும் சம்பவங்கள் எவ்வாறு சைவசித்தாந்த கருத்தியலை பிரதிபலித்து நிற்கிறது என்பதில் இவ்வாய்வு கவனம் செலுத்துகிறது. நாடகத்திலிருந்துஉதாரணங்கள் மூலம் விளங்கப்படுத்தப்படுகிறது. சைவசித்தாந்த கருத்தியலை மக்களிடம் எடுத்துச்செல்வதற்கு நாடகங்கள் மிகவும் பொருத்தமான ஊடகமாக எவ்வளவிற்கு செயற்பட்டுள்ளது என்பது தொடர்பான புரிதலை இவ்வாய்வு அகலப்படுத்தும் எனலாம்.

19ஆம் நூற்றாண்டில் மொழிப்பயில்வில் ஏற்பட்டமாற்றம் மற்றும் பதிப்புத்துறையின் விருத்தி ஆகியன ஒருதளத்தில் மக்களிடையே சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டு செல்லும் அதேவேளையில் ஆற்றுகைக்கலை பாரம்பரியம் வேறோர் தளத்தில் மக்களிடையே கருத்துக்களை கொண்டு சென்றது எனலாம். உதாரணமாக புதுச்சைவம் எனும் தலைப்பிலான நூல் அனைவரும் எளிமையாக சைவம் கற்க வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டுள்ளது.

சைவவிலாசசம்போதினி (1910 – 1915) எனும் பத்திரிகை வெளியிட்டார். இப் பத்திரிகைகளில் சைவசித்தாந்தம் தொடர்பான பல கட்டுரைகள் புலவரால் எழுதப்பட்டது. சைவசித்தாந்த கட்டளைக்கும்மி, கிளிப்பாட்டு கும்மி வடிவில் எழுதினார். மேலும் சமகாலத்தில் சிறுத்தொண்டர் நாடகம், திருவாதவூரர் நாடகம், நயனப்பிரகாசனம் என்ற நாடகங்கள் சைவசித்தாந்தத்தை பிரதிபலிக்கும் வகையில் எழுதப்பட்டன. இணுவில் சின்னத்தம்பிப்புலவர், கண்ணப்ப நாயனார் நாடகத்தையும் மேலும் பலர் புராண, இதிகாச கதைகளையும் நாடகங்களாக மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தனர். புராணமுத்தர், பாரவேலர் ஆகியோர் 1770 - 1828 வரை புராண இதிகாச நாடகங்களை எழுதினர். கந்தர்மடம் சுப்பிரமணியபிள்ளை 1789ல் தென்னவன் பிரமராயன் (மாணிக்க வாசகரின் வரலாறு) நாடகத்தினை எழுதினார் என்றும் இந்நாடகஒத்திகைகளில் ஆறுமுகநாவலர் அவர்களும் பங்குகொண்டிருந்தார்[1]. இவை நாடகம் எவ்வளவிற்கு மக்களிடம் சமயக்கருத்துக்களை எடுத்துச்செல்வதற்கு பயன்படுத்தப்பட்டது என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

சைவசித்தாந்தம் பற்றிய கதையாடல்கள் சைவசமயத்தவர்களிடையே மட்டுமின்றி கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகிய மதங்களிடையேயும் தாக்கம் செலுத்தும் அளவிற்கு 19ஆம் நூற்றாண்டில் பரம் பலடைந்தது எனலாம். கிறிஸ்தவர்களும் மேலைத்தேயத்தவர்களும் சைவசித்தாந்த ஆராட்சிகளில் ஈடுபடுவதற்கு துாண்டியது அது மட்டுமன்றி இஸ்லாமியர் மாயையை ஒருபெரும்சக்தியாக உருவகித்து மாயை வீரம் எனும் நாடகத்தினை எழுதியிருந்தனர்.

ஈழத்தில்மட்டுமல்லசர்வதேசமட்டத்திலும் சைவசித்தாந்தத்தை எடுத்துச் செல்வதில் ஈழத்தமிழர் பெரிதும் பங்காற்றி நிற்கின்றனர். உதாரணமாக சேர் முத்துகுமாரசுவாமி அவர்கள் சைவசித்தாந்தம் தொடர்பான சொற்பொழிவுகளை விவேகானந்தருக்கு முன்னமேயே நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. விவேகானந்தரே ஒரு சைவசமயி எவ்வாறு தோற்றமளிப்பார் என்பதனை சேர் முத்துக்குமார சுவாமியின் தோற்றப்பொலிவினை வர்ணிப்பதன் மூலம் மேலைநாட்டவர்க்கு எடுத்துரைத்தார் என்பது வரலாற்றில் மிகமுக்கியமான விடயமாகும். அத்துடன் சேர் முத்துக்குமார சுவாமி 1863 அரிச்சந்திரா எனும் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிஆக்கம் செய்து லண்டனிலுள்ள மகாராணியாரின் அரண்மனையில் தானும் ஒரு பாகமேற்று ஆற்றுகையும் செய்திருந்தார். இந்நாடகத்தில் அரிச்சந்திரனின் கதை சைவசித்தாந்த நோக்கில் வியாக்கியானிக்கப்பட்ட ஆராட்சிக்கட்டுரையும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[2] மேலும் பேனாட்சோ தனது On the Rocks எனும் நாடகத்தில் யப்னா எனும் பாத்திரம் சைவசித்தாந்த கருத்துக்களை பேசும் சேர்முத்துக்குமாரசுவாமியையே மனதில் வைத்து எழுதினார் என்று கூறப்படுகிறது. இத்தகவல்கள் சைவசித்தாந்தக்கருத்தியல் நாடகத்தின் வடிவில் நாடுகடந்து ஒரு நூற்றாண்டிற்கு முன்னரேயே எவ்வாறு பிரபல்யம் பெற்றிருந்தது என்பதற்கு இவை ஆதாரங்களாகும்.

**கல்வியியல் செயற்பாட்டாளராக சோம சுந்தரப்புலவர்**

அரங்கினை கற்றல் கற்ப்பித்தலிற்கான ஒரு அணுகுமுறையாகப் பயன்படுத்துவதென்பது தொடர்பாக இன்றைய கல்வியியலாளர்கள் அக்கறை செலுத்திவருகின்றனர். இதன் பெறுபேறாகவே ஆரம்பநிலை வகுப்புகளில் அரங்கும் அரங்கநுட்பங்களையும்

அறிந்த ஆசிரியர்களின் முக்கியத்துவம் பிரக்ஞைபூர்வமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தவகையில் சோமசுந்தரப் புலவரை ஈழத்தில் கல்வியியல் அரங்கின் முன்னோடி எனலாம்.

மாணவர்களுக்கு பயன்படும் வகையில் இவர் பல ஓரங்க நாடகங்களை எழுதியுள்ளார் 1925ல் சைவசித்தாந்தத்தை பொருளாகக் கொண்டு நாடகங்களை எழுதினார். (இதே காலப்பகுதியிலேயே ரவிந்திரநாத்தாகூர் நாடகம் மாணவர் தயாரித்தார் தனது மாணவர்களுக்கு இதே நோக்கங்களிற்காக நாடகங்கள் தயாரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.) கிளிப்பாட்டு அல்லது சைவசித்தாந்தகும்மி மற்றும் தெய்வத்திறன் உரைத்தபத்து ஆகியன புலவரால் சைவசித்தாந்தத்தினை பொருளாகக் கொண்டு இலகு தமிழில் எழுதப்பட்ட பாடல்களாகும்.

உயிரிளங்குமரன் எனும் நாடகம் முற்றிலும் ஒரு கல்வியியல் அரங்கச் செயற்பாடாகும். கல்வியியல் அரங்கு என்பது நடிகர்கள் அல்லது ஆற்றுவோரால் குறிப்பிட்ட வயதுடைய மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக கல்வி அறிவூட்டும் நோக்கம் கொண்டு ஆற்றுகை செய்யப்படும் நாடகங்களாகும். புலவரை ஒரு கல்விச்செயற்பாட்டாளர் என்றும் கூறமுடியும். ஏனெனில் பாடசாலை மாணவர்களிற்கு தீட்சை அளித்து தேவாரங்கள், புராணங்கள் பாடுவதற்கும் பயிற்சியளித்தார். இங்கு தனது சகபாடிகளோடு இணைந்து இந்துவாலிபர் சங்கத்தினை அமைத்துக்கொண்டார். இந்துவாலிபர் சங்கத்தில் புராணம் வாசித்தல், சைவசமய வகுப்புகள், விவாத அரங்குகள் முதலியன இடம்பெற்றன. இதனூடாக சைவக்கல்வி மரபின் சிறப்பான தேர்ச்சிக்கு வழிகோலியது எனலாம்.

இந்நாடகத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்த நடித்துள்ளனர். கொழும்பு, யாழ்ப்பாணம், 1927ல் நவாலி அட்டகிரி முருகன் கோவில் வீதி என்பவற்றில் இந்நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.[3] இவ்வாற்றுகையின் போதே இவருக்கு புலவர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. சைவசித்தாந்தம் எனும் கருத்தியலிற்கு உருவம் கொடுக்கப்பட்டு மாணவர்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளும் வகையில் காட்சிப்படிமங்களின் தொகுதியாக இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அருபமான விடயங்களை காட்சிப்படுத்திக் கூறும் மரபு தமிழ் மரபு அரங்குகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயற்பாடுகளால் இவரை ஈழத்துத் தமிழ் மரபில் கல்வியியல் அரங்கின் முன்னோடியாகக் கொள்ளலாம். இதுமட்டுமல்ல இவரது பாக்களும் இவரை ஒரு educational poet ஆகவும் அடையாளப்படுத்தியுள்ளது. அத்துடன் இந் நாடகம் அக்காலத்தில் கொழும்பிலிருந்த அறிஞர்களையும் தனது சமகாலத்து அறிஞர்களதும் பாரட்டப்பெற்றது.

உயிரிளங்குமரன் நாடகத்தினை 1925இல் எழுதியிருந்தும் இந்நாடகம் வெளியிடப்பட்டது 1936இல் ஆகும். அணிந்துரை முதலியார் இராசநாயகம், சிறப்பாயிரம் வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் எழுதியமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழறிஞர் எழுதும் நூல்களை வெளியிடுவதற்கு ஒரு பொது நிதி அமைக்க வேண்டும் என்றும் பொருள் முட்டுப்பாட்டால் பலர் நூல்களை வெளியிடாமல் இருக்கின்றார்கள் என இந்நூலின் பதிப்பாசிரியரின் ஆதங்கம் இன்றும் பொருந்தியுள்ளது.

பாடநூலிற்கு அப்பாலான பாடஅரசியல் புலவரால் நடத்தப்பட்டது. பாடசாலை

பாடத்தின் விஸ்தரிப்பாக புலவரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. மத எதிர்ப்பு பற்றிய எவ்விதமான கருத்துக்களையும் திணிக்காது தான்சார்ந்த மதக்கருத்துக்களை மாணவர்களுக்கு போதிப்பதிலேயே இவரது பிரதான கவனம் திரும்பியது. இவ்வாறாகவே யாழ்ப்பாணத்தின் ஒரு கருத்தியலாக சைவசித்தாந்தம் கட்டமைக்கப்பட்டது.

**நாடகத்தில் சைவசித்தாந்தத்தின் பிரதிபலிப்புகள் - உயிமிளங்குமரன் நாடகம்**

**கதைப்பின்னல் - உயிரிளங் குமரன்**

பூலோகத்தின் வெள்ளிமலையில் நீலகண்டன் எனஓர் அரசன் இருந்தான். அரசனின் மனைவிசிவகாமியம்மையார். இவர்களிருவரும் உலகிலுள்ள அனைவருக்கும் துன்பங்களிலிருந்து பேரின்பம் அளித்தலே இவர்களது பணி. இவர்களைஉலகம் அம்மை அப்பாஎனபோற்றினர். இவர்களுக்கு உயிரிளங்குமரன் எனும் ஒருமகனிருந்தான். இவன் உலகெங்கும் சுற்றிவரும் வழியில் சிவகாமியம்மையாருக்கு உரித்துடைய பெண் பேரின்பவல்லி மீது காதல் கொண்டான். இதனால் மிகவும் மயக்கமுற்றிருந்தான். இதனால் மகனது நிலைமையை சிவகாமியம்மையார் நாயகனிடம் தெரிவித்தார். மகனைக் குணப்படுத்தி தோழனுடன் காட்டுக்கு அனுப்பினார். நீலகண்ட வேந்தனுக்கு எதிரியாக இருந்த இருண்மலவேந்தன் என்னும் அரசன் பகையை வளர்த்துக் கொண்டான்.

நீலகண்டனின் மகன் காட்டில் இருப்பதை அவன் அறிகிறான். சிற்றின்பவல்லியை அனுப்பி அவனைக் கைதுசெய்து சிறையிடுகிறான். உயிரிளங் குமரன் அனைத்து உறவுகளையும் மறந்துவிடுகிறான். இதே வேளை பேரின்பவல்லிபிரிவினால் மிக வருந்தியிருந்தாள். எனினும் உயிரிளங் குமரன் மீளவும் வருவான் என குறத்தி குறி சொல்கிறாள். அத்துடன் சிவகாமியம்மையும் தீய கனவு காண்கின்றாள். இதன் காரணமாக நீலகண்டமன்னன் சுப்பிரமணியமுனிவரை அழைத்து உயிரிளங்குமரனைக் கண்டுபிடித்து வருமாறு ஆணையிடுகிறார்.

முனிவர் உயிரிளங்குமரனை கண்டுபிடித்து வெள்ளியங்கிரிக்கு வருமாறு கட்டளையிடுகிறார் - அவ்வேளையில் சிற்றின்பவல்லி மாயையினால் அவனைத் தடுக்கிறாள். இதனால் உயிரிளங்குமரன் பேரின்பவல்லியின் வேடம்பூண்டுமுனிவர் கொடுத்த ஞானமந்திரவாளினால் அவளது வலிமையைக் குன்றச் செய்து விடுகிறான். பின்னர் மந்திரத்தினால் தனதுநண்பன் அறிவனை அவ்விடத்திற்கு வரவழைக்கிறான்.

உயிரிளங்குமரனின் ஞானமந்திரத்தால் மாயவலையை அறுந்துபோக அவன் இருண்மலவேந்தனிடம் முறையிடுகிறான். எனவே இருண்மலவேந்தன் உயிரிளங்குமரன் மீதுபோர் தொடுக்கிறான். உயிரிளங்குமரன் வெற்றிபெற்றுதப்பிச் செல்கிறான். திருநீலகண்டமன்னன், சுப்பிரமணியமுனிவர் முதலியோர் வரவேற்கின்றனர். பின்னர் பேரின்பவல்லியைத் திருமணம் செய்து மகிழ்ந்துவாழ்கின்றனர்.

**பாத்திரங்கள்**

இந்நாடகம் அங்கம், களம் என ஏனைய நாடகங்கள்போன்று பிரிக்கப்பட்டிருப்பினும் இக்குறித்த நாடகத்தில் உயிர்கள் தாம் எடுக்கும் உடலிற்கேற்ப இடம் மாறுதல் என்ற கருத்தமையிலும் நோக்கப்படலாம். மேலைப்புல ஒழுக்க பண்பு அற்புத விடயங்கள் அரங்கக்காவியங்களினூடாக சொர்க்கம், நரகம் என்பவற்றை மக்களிற்கு காட்சிப் படுத்தியதனைப் போன்று இந் நாடகத்திலும் பாத்திரம் ஒவ்வொன்றும் அமைவிடப்படுத்தப்பட்ட முறையை தத்துவங்களாக காட்சிப்படிமங்களாக எளிமையான

புரிந்து கொள்ளலுககு உதவுகிறது. இறைவன் ஆணவ மலத்தை நீக்குவதற்காக உயிர்களைப் படைக்கிறான். உயிர்கள் பல உடம்புகளை எடுக்கின்றன. நாடகத்தில் பாத்திர நடிப்பு எனப்படுவதும் உடலுக்கு உயிர் கொடுப்பதை ஒத்ததே.

உயிரிளங்குமரன் எனும் இந்நாடகப் பாத்திரங்களை மையமாகக் (character centered drama) கொண்டது. எனவே பாத்திரங்களினூடாகவே பிரதானமாக கருத்து வெளிப்படைகிறது. இந்நாடகத்திற்கு உயிரிளங்குமரன் எனத் தலைப்பிட்டமையே உயிர் இளமையானது எப்பொழுதுமே இயங்கிக்கொண்டிருப்பது என்ற அர்த்தத்தில் இடம்பெறுவது கவனிப்பிற்குரியது. தெய்வ வணக்கங்களோடு நாடகம் ஆரம்பமாகின்றது. இத்தெய்வ வணக்கம் பகுதியில் தமிழ்த் தெய்வ வணக்கம் எனும் பகுதியில் தமிழை தெய்வமாக உருவாக்குகின்றார். பொதுவாக தமிழ் தாயாக கூறப்படுவது பொதுவானது எனினும் தெய்வமாகக் கூறுவது கவனிப்பிற்குரியது.

ஆனந்தவல்லியே அன்பருளமகலாத அரிய செந்தமிழன்னையே.... –4

இந்நாடகம் அங்கம்,களம் என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாடகத்தின் ஆரம்பத்திலேயே பாத்திரங்கள் அவற்றின் இயல்புகளை அடிப்படையாகக்கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அவை சைவ சித்தாந்தக்கருத்தியலைப் பிரதிபலத்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

**பாத்திரங்கள்**

- திரு நீலகண்டன்: - வெள்ளியங்கிரி வேந்தன்- இறைவன்
- சிவகாமித்தாயார்: - திருநீலகண்டன் வாழ்க்கைத் துணைவி- இறைவி, சக்தி
- நந்தி: - திருநீலகண்டனின் அரண்மனைக் காவலன் -
- உயிரிளங்குமரன்: - திருநீலகண்டன் மகன் - உயிர்
- அறிவன்: - உயிரிளங்குமரன் நண்பன்
- பேரின்பவல்லி: - திருநீலகண்டனுடைய மருமகள் - பேரின்பம்
- வயந்தமாலை: - பேரின்பவல்லியின் காதற்றோழி
- இருண்மல வேந்தன்: - காயாபுரிக்கோட்டை மன்னவன் - ஆணவம்
- கட்டியக்காரன், மந்திரிமார் மூவர்,ஒற்றன், வாயில் காப்போன்)
- இருண்மலவேந்தன் அரண்மனையாளர்கள்
- சிற்றின்பவல்லி: - இருண்மலவேந்தன் தங்கை மகள் - உலகியல் இன்பம் - மாயை
- அறவன் மறவன்: - இருண்மல வேந்தன் வீரர்
- சுப்பிரமணிய முனிவர்: - திருநீலகண்டன் அமைச்சருள் முதல்வன் - குரு
- கண்ணப்பன், நெடுஞ்செழியன்: - காயபுரிக்கோட்டைக் காவற்காரர்
- குறத்தி : - குறிகூறும் குறிஞ்சி நிலத்தாள்
- பறையன்: - முரசு கடிப்பிடும் முதுகுடியிற் பிறந்தோன்.

சைவசித்தாந்தக் கருத்துப்புலப்படும் பாத்திரம் உயிரிளங்குமரன். அதாவது. பாழாகின்ற பிறப்பினையடைந்த உயிராக இருப்பினும் அது ஊழ் வினையின் பேறாக புதிய பிறப்புக்களை எடுத்தவாறே இருக்கும் என்பதை அர்த்தப்படுத்துவதாக நாடகத்தின் தலைப்பு அமைந்துள்ளது.

உயிரிளங்குமரன் பேரின்ப வல்லியை சந்தித்து காதல் கொள்ளுதல், மருட்சி நீங்க மந்திரக் கவசம் அணிந்து காட்டிற்கு நண்பனுடன் வேட்டையாடச்செல்லுதல், அங்கு சிற்றினபவல்லியின் வலையில் வீழ்தல், இருமலவேந்தனின் ஆக்கிரமிப்பிற்கு உட்படல் இறுதியில் சுப்பிரமணிய சுவாமியினால்

மீட்கப்பட்டு இறுதியில் நீலகண்டனிடத்திலும் சிவகாமித்தாயாரிடத்தும் சேர்தல் எனும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இங்கே உயிரின் இயல்பு உயிரிளங்குமரனின் செயல்கள் மூலம் காட்சிப்படுத்தப்படுகிறது. மும்மலத்தால் அறியாமை, அவா, வினை, பிறவி என்பன ஏற்படுவதுஇங்கு பிரதிநிதித்துவப்படுகிறது. ஒன்று அறிவைமறைக்க, ஒன்று விருப்பு வெறுப்பை உண்டாக்க, ஒன்று உடம்பையும் உலகையும் தரும். இவற்றைப் பெற்று பிறந்திறந்துழல்கின்றன. பிறப்பைநீக்கி இறைவன் திருவடியை அடைவது பேரின்ப மறு உயிர்கள்.

உயிரிளங்குமாரன் காட்டில் அழகான சூரியோதயக் காட்சிகளைக் காணுதல் பண்பு பல்வேறு உலகியல் விடயங்களில் ஈடுபட்டு இறுதியில் நண்பனதும் சுப்பிரமணிய முனிவரதும் துணையினால் விடுதலை பெறுகிறான்.[5]

> உயிரிளங் குமரன் : இப்பகுதி குருவின்
> அருளினால் ஆன்மா ஈடெற்றம் பெறுவதனை
> காட்டுகிறது.உழுவப் பண்புடைய நண்ப!
> இறைவனுயிர்க்குயிராய் மறைந்திருப்பது
> போல நீயுமிங்கு தோன்றாத் துணையாய்
> மறைந்திருந்தனை சிற்றின்பவல்லியை வென்று
> விட்டேன். வெள்ளியங் கிரியையடைதல்
> வேண்டும்.

என உயிரிளங்குமரன் கூறுவது சைவ சித்தந்தம் கூறும் உயிர்களின் இயல்புகள் குற்றங்கள், குற்றங்களை நீக்குதல் என்பதனை பிரதிபலிக்கிறது.

திருநீலகண்டன் எனும் பாத்திர உருவாக்கத்தில் கடவுளின் (பதி) இயல்பு தொடர்பான அம்சங்களைக் காணலாம். பிறப்பும் இறப்பும் அற்றது. பிறப்பிற்கு காரணமான மலத்தொடர்பு அற்றது, அநாதியாகவே மலங்களலிருந்து விடுபட்டது. இறைவன் குரு வடிவில் கிடைக்கப்பெற்று உய்தி பெறுவதாக விளங்கிக் கொள்ளலாம். உண்மையறிவு ஆனந்தம்,திருவருளுடன் படைப்பாற்றல் செய்விக்கும்,இறைவன் ஆணைகடந்துதீவினைசெய்வோர் அடையுந் தண்டனைகளைஎடுத்துக் கூறுஞ் செய்யுள் மாணவருக்குநன்னெறிகாட்டும்[6].

இந் நாடகத்தில் சிவகாமித்தாயார் (இறைவி) மட்டுமே திருநீலகண்டனுடன் உரையாடுவதாக படைக்கப்பட்டுள்ளது. அதாவது இறையருள் இருந்தால் மட்டுமே இறைவனை அடையமுடியும்என்பதனை இது குறிக்கின்றது.

சிவகாமித்தாயார் இறைவியை பிரதி பலிக்கும் பாத்திரம். இது இறைவனின் ஆற்றலைக் குறிக்கும். சக்தி அருளை மட்டும் செய்யும். சிவகாமித் தாயார் மகனைத் தேடும் பகுதியினை உதாரணமாகக் கூறலாம்........

சிவகாமித்தாயார்சக்தி, தாய், கருணை எனும் பண்பில் ஆன்மாவைத் தேடி இறைவனிடம் சேர்க்கும். மேலும் சக்தியும் சிவனும் பிரிவற்றது என்பது இந் நாடகத்தில் திருநீலகண்டனும் சிவகாமித்தாயாரும் பிரிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் அமைக்ககப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இறைவன் குருவடிவில் உபதேசம் கிடைக்கப்பெற்று உய்தி பெறுவதாக விளங்கிக்கொள்ளலாம்.

> சிவகாமிததாயார்: வந்தவழி தப்பி வேறு வழி புக
> மாயவிலங்குகள் கொன்றனவோ
> வசந்தநரிக் குழால் தின்றனவோ
> வந்து பதிவிலிருந்து பிடிக்கின்ற
> மாயமறவர்கள் கிட்டியே[7]

பேரின்பவல்லி, சிற்றினபவல்லி எனும் பாத்திரங்கள் பேரின்பம், சிற்றின்பம்

என்பவற்றை குறித்து நிற்கும் பாத்திரங்களாகும். பேரின்பவல்லி வாழும் இடம் மனதிற்கு இதமான இனிமையான சூழலாக காட்சிப்படுத்தப்படுகிறது. பேரின்பம் எத்தகையது என்பது பேரின்பவல்லி வாழும் சூழல் விவரிக்கப்படுவதனூடாக காட்சியனுபவமாக விவரிக்கப்படுகிறது. பேரின்பவல்லி தனது இலட்சியத்தில் உறுதி யாக இருத்தல்மற்றும் குறத்தியின் நட்பு மேலும் இவ்விலட்சியம் நிறைவேற வழிவகுக்கிறது.

தேவதேவன் திருநீலகண்டன்
திருவருள் போலக் குளிர்நிழல் பரப்பி
அடியார் பொலக் கடிமலரேந்தி
வாழும் சூழலின் இயற்கை அழகு ஒலிகள்
பேரின்ப வல்லி ஊஞ்சல் ஆடும் போது
பழகுமிடை பிங்கலைகள் தூணதாக
பயிலு ஒடு நாடியொரு விட்டமாக
ஒழுடுகின்ற வமுதகலை வடமதாக
ஓங்கார வட்டமுயர் பீடமாக.......[8]

என தத்துவம் ஊஞ்சல் வடிவத்துடன் எடுத்துக்கூறப்படுகிறது. ஒவ்வொரு அம்சத்தின் பண்புகளும், அவற்றின் செயற்பாடுகளும் காட்சிப் படிமங்களாக விளக்கப்படுகிறது.

சிற்றின்பவல்லி மாயையைக் குறித்து நிற்கும் பாத்திரமாகும். மாயை ஆன்மாக்கள் வினைப் பயன்களை அனுபவிப்பதற்கு உதவுகிறது. அவ்வகையில் உயிரிளங்குமரன் சிற்றின்பவல்லியிடம் சேர்கிறான். சிற்றின்பங்கள் துன்பத்திற்கிடமானவை என்பதனை விளக்குவதற்கு ஆக்கப்பட்ட பாத்திரமாகும். உயிரிளங்குமரன் மண்ணினும் பொன்னினும் பெண்ணினும் மயங்கி சிற்றின்பவல்லியை பேரின்ப என நினைத்து மயக்கமுறுதல் மற்றும் இருண்மலவேந்தனுக்கு அனுசரனையான சிற்றின்பவலிலியின் செயற்பாடுகள் உயிரிளங்குமரனை சிறைப்படுத்துவதற்கென திட்மிட்டே செயற்படுத்தப்படுகிறது.

குறத்தி எனும் பாத்திரம் தலைவன் - தலைவி (காதலன் - காதலி) இருவருக்கும் இடையில் காதலில் குறத்தி தலைவிக்கு காதலை உறுதிப்படுத்தி தலைவன் வருவான் எனக் குறி சொல்லுவது அனைத்துக் குறவஞ்சிகளிலும் காணப்படும் பொதுமையான ஒன்று. இப் பகுதியில் மருதடி விநாயகர் அட்டகிரி முருகன் என உள்ளூர்த் தெய்வங்களை குறிப்பிடுவதன் மூலம் நாடகக்காட்சி பாத்திரங்கள் யாவும் பார்வையாளருக்கு மிக அருகே கொண்டு வரப்படுகிறது. வரலாறாக்கம் (historification) எனும்உத்தியைப் பயன்படுத்திகதைகூறப்படும் போது ஐதிகம் சார்ந்த விடயங்கள் சம காலத்திற்கு கொண்டுவரப்படுவது சிறந்த ஓர் உத்தியாகும்.

சுப்பிரமணியமுனிவர் எனும் பாத்திரத்தினூடாக சைவசித்தாந்தம் கூறும் குருவின் பண்புகளை விளங்கிக்கொள்ள முடிகிறது. சுப்பிரமணிய முனிவரது காயாபுரிக் காட்சி நகைச்சுவையானது அத்துடன் இப் பகுதி வெறுமனே பேச்சு மொழியிலமைந்தது குறிப்பிடத்தக்கது. அதாவது குருவிற்கும் ஆன்மாவிற்குமான நெருக்கம் இதனூடாகப் புலப்படுகிறது. உதாரணமாக ஐந்தொழில்கள் பற்றிய எளிமையான விளக்கம் பின்வருமாறு:

சுப்பிரமணியசுவாமி: அவர்கள் தொழிலா
கேட்கிறாய் சொல்லுகிறேன் கேள். ஆச்சி
உலகங்களெல்லாவற்றையும் முடிக்கிறது. அப்பர்
முடிய முடிய அவிழ்க்கிறது. இது தானப்பா அவர்
தொழில்[9]

மும்மலங்களிலிருந்து ஆன்மா தன்னை விடுவிப்பதற்கு இறைவனின் துணை அவசியம். என்பது இச்சந்தாப்பத்தில் விளங்க வைப்பதோடு இந்நாடகத்தில் குருவின்அருள் சுப்பிரமணிய சுவாமி உயிரிளங்குமாரனை மீட்டலினாடாக விளக்கப்படுகிறது.

பொருவறு மன்னன் போகவிட்டிட்டு
மருளறு சுப்பிரமணிய மாமுனி
வரமுறக் குமரனும் மாயை நீங்கினான்

குருவருளெய்திடில் யாவுங் கூடுமே.
ஞானக் கண்ணாடி கொண்டு காயாபுரிக்
கோட்டையைப் பார்த்தல்[10]

முனிவர் உயிரிளங்குமரனைக் கண்டு பிடித்து வெள்ளியங்கிரிக்குவருமாறு கட்டளையிடுகிறார் - அவ்வேளையில் சிற்றின்பவல்லி மாயையினால் அவனைத் தடுக்கிறாள். இதனால் உயிரிளங்குமரன் பேரின்பவல்லியின் வேடம்பூண்டு முனிவர் கொடுத்த ஞானமந்திரவாளினால் அவளது வலிமையைக் குன்றச் செய்துவிடுகிறான். பின்னர் மந்திரத்தினால் தனதுநண்பன் அறிவனைஅவ்விடத்திற்குவரவழைக்கிறான்.

உயிரிளங்குமரனின் ஞானமந்திரத்தால் மாயவலை அறுந்துபோக அவன் இருண் மலவேந்தனிடம் முறையிடுகிறான். எனவே இருண்மலவேந்தன் உயிரிளங்குமரன் மீதுபோர் தொடுக்கிறான். உயிரிளங்குமரன் வெற்றிபெற்றுதப்பிச் செல்கிறான். திருநீல கண்டமன்னன், சுப்பிரமணியமுனிவர் முதலியோர் வரவேற்கின்றனர். பின்னர் பேரின்பவல்லியைத் திருமணம் செய்து மகிழ்ந்து வாழ்கின்றனர்.

இருண்மல வேந்தன் மும்மலங்களினால் கட்டுண்டவன் என்பது இப் பெயரில் இடம்பெறும் மலம் என்ற சொல்லிலிருந்த புலனாகிறது. இப்பண்பு மன்னின் அறிமுகத் தோற்றம் வர்ணிக்கப்படுவதிலிருந்து கண்டுகொள்ளலாம். சாதாரணமாக ஏனைய நாடகங்களிலும் மன்னன் வரவில் எச்சரிக்கை கூறப்படுவது வழமை ஆனால் இப்பகுதியில் கூறப்படும் எச்சரிக்கை மலங்கள்தொடர்பான விழிப்புணர்வு என்ற அர்த்தத்திலும் பொருள்கொள்ளமுடியும்.

அஞ்ஞானக்கோலேந்தி
ஆகங்காரத் திரியுருட்டிக் கடுங்கவிமிடி தழைய
நெடுங்கடற் புனையனைத்தும் கருங்கொற்றக்
குடையின் கீழ் ஒரு தனியாளு மிருண்
மலவேந்தன் சபைக்கெழுந்தருளுகின்றான்...
எச்சரிக்கை! எச்சரிக்கை!

தொடர்ந்து இருண்மல வேந்தனின் படை வீரர் பண்புகள் செயல்களும் அச்செயல்களிற்கு எப்பண்புகள் அனுசரனையாக இருக்கின்றன என்பதும் பின்வருமாறு கூறப்படகிறது

மந்திரி: கோபன் கொலைஞன் முதலாகிய
யானை மறவரும், காமன் குரோதன்
முதலாகிய இவுளி வீரரும், ஆசையான் கலியன்
முதலாகிய ஏவல் இளைஞரும்......"

இருண்மல வேந்தனின் கட்டளைப்படியே சேவகர்கள் உயிரிளங்குமாரனை சிறையிலிடுவதற்கான முயற்சிகள் இடம் பெறுகின்றன. அதாவது ஆணவம் தன்னைக்காட்டாது ஆனால் வறுத்த வித்துப்போல ஆன்மாவைப் பீடித்திருக்கும். இங்கே இருண்மல வேந்தனின் செயற்பாடுகளும் இத்தகையதே ஆகும்.

**காட்சிப்படிமங்கள்**

நாடகத்தின் சம்பவங்கள் ஒவ்வொன்றும் குறித்த ஒரு காட்சிப் பின்னணியையே அமைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. நீலகண்டன் பதியோடு இணைந்த பாத்திரங்கள் வரும் பகுதிகள் ஒளியோடு தொடர்புடையனவாகவும் மலங்களை பிரதிபலிக்கும்இருண்மலவேந்தனின்இருப்பும் இருள் சூழ்ந்த காட்சிப்படிமங்களாக உள்ளன. நீலகண்டமன்னனின் இடம் பகற்பொழுது, இருண்மலவேந்தனின் மந்திரிசபை இரவு மற்றும் ஏனைய காட்சிகளில்

சோலை (முற்பகல்) – நீல கண்டன் அரண்மனை - காடு - இருண்மல வேந்தனின் மந்திராலோசனை சபை – மத்திய புவனக்காடு உதயம் (வேட்டை), மாயாபுரிக்காடு, - மாயாபுரியி சாயி காடு (நண்பகல், வெள்ளியாகிரி கன்னிகாமாடம் (முற்பகல்), காயாபுரிக் கோட்டை

(முற்பகல்),வெள்ளியலங்கிரி,நாகவீதி முற்பகல் என்றவாறாக இறைவனும் மலங்களின்தம் காட்சிப்பின்புலம்கருத்துருவதன்மை கொண்ட தத்ததுவத்தின் காட்சிப் படுத்தலாகும்.

மேலும் சிவகாமித்தாயார் உயிரிளங்குமரன் காட்டிற்குச்செல்லும்போது காடு சிவகாமித் தாயார் காட்டினைப்பற்றி வர்ணிக்கும் பகுதி......

சிவகாமித்தாயார்: என் கண்மணி போன்ற
மைந்தாஆங்காரமானசிங்கங்களும் அடங்காக்
கோபப்
புலிகளும் ஆசைப் பெரும் பேய்களும்
வாழ்கின்ற இந்தமோசமானநீஅகமாகப்
போய் வருவாயாகமைந்தா?
அக்காட்டிலேநஞ்சையுமிழும்
பேழ்வாயினையுடைய
ஐஞ்சு தலைமாநாகமுண்டு. அதனைக்
கண்டுஅஞ்சாதேமேலும்
வஞ்சனை
செய்துமயக்குகின்றமோகவல்லிஎன்னும்
பெண்ணங்குமாண்டுண்டென்று
கூறுவர். அவளைக் கண்டுநிலைகுலையாதே[12].

என அறிவுரை கூறுவது என்பனவற்றைக் கூறலாம். மேலும்
வெள்ளி மலைச்சாரற்கண் ஓர் நறும்
பொழில் நாகப்பறையன் மணநிகழ்ச்சியை
அறிவிக்கும் சந்தப்பாக்கள்13 சுத்தமாயையின்
தோற்றத்தினை காட்டவதாகக் கொள்ளலாம்.
உயிர்கள் வினைகளின் தொடர்பால் பல்வேறு
உடம்புகளை எடுக்கின்றன. உடம்புதோறும்
அறிவுவேறுபடும்.

இத்தகைய தன்மையினையே இப்பாத் திரத்தின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

**வாழ்வியல் நடைமுறையும் சைவ சித்தாந்தமும்**

உயிரிளங்குமரன் எனும் நாடகத்தில் சமூகத்தின் பல நிலைகளிலுள்ளபாத்திரங்கள் அவற்றிற்குரிய கடமைகளும் தெளிவாக விவரிக்கப்படகிறது. அதாவது ஆன்மாக்கள் கன்மவினைகளினால் செயலாற்றும். இந் நாடகம் எழுதப்பட் காலம் (1927) காலனித் துவகாலம் எனவே இந்நாடகத்தில் வரும் பல சம்பவங்கள் அக்கால சமூகத்தின் பிரதி பலிப்புகளாக இரக்கம் அதே வேளையில் இவை சமகாலத்திற்கும் பொருந்தத்தக்கதாக காணப்படுவதுகுறிப்பிடத்தக்கது. உதாரண மாக நீதியைப்பற்றிக் குறிப்பிடும் பகுதியில்

மந்திரி: கைக்கூலி எனுங் காதலுடனே ஆசையன்
நீதியருஞ்சபை புகுந்து தற்கொலை
தன்னைப் பொய்க்கொலையாக்கிப் பொய்க்
கொலை தன்னை
மெய்க்கொலையாக்கிக் கொலை புரிந்தோனைச்
சிறை புகா தெடுத்துக் கொலை
செயாதவனைச் சிறைபுகவிடுத்து இறந்தோர்
தம்மையும் எழுத்தெழுதுவித்து
நீதியையழித்து வருகின்றான்[14]

எக்காலத்திற்கும் பொருந்தும்வகையில் வளமான பூமியில் போர் நடைபெற்றால் இந்நிலம் எத்தகையதாக மாற்றங்கொள்ளும் பின்வரும் பாடல் விவரிக்கிறது. .........

உலகியல் பண்புகள் நிலையற்றவை என் பது மாயாபுரியிலுள்ள வளமான இடம் எவ்வாறு காடானது என்பது பற்றிக் கூறும் போது விவரிக்கப்படுகிறது. வளமான பூமி இரு மன்னர்களிடையே நடந்த போரின் விளை வான பயனற்ற காடாகியது.

....வளமுறு முழவர் வாழ்ந்திடு சும்மையும்
குளிர்புனல் சிறைசெயுங் களமா கம்பலையும்
செமுநீர்க்குவளையுஞ் சீரிய வறுகும்.......
தும்பையுந் துளாயுந் தோன்றியும் படர்ந்து
வச்சிரமருப்பு மதமாமுழக்கமும்
கொடுவரி யுமுவை விடுகடுங்குரலும்.....
முற்றும்மலிந்து முதிர்காடானதே[15]

கப்பற்பாட்டு எனும் பகுதியில் வாழ்வு சைவசித்தாந்தத்தோடு தொடர்புபடுத்தி தத்துவாத்தப்படுத்துகிறது.

ஐம்பெரும் பூதத்தினாலுருவமாகி
அறு நாலு தத்துவப் பாய்மரம் நாட்டி
நம்புமறை யோரைந்தையுள்ளே வகுத்து
நண்ணு கலை யாதியோ வைரவர் தொழில் புரிய
உம்பரோ வைரவர் நின்றுள்ளேயியக்க
உலகு வலமாயோடி வருகின்ற கப்பல்
மாறாத பிறவியெனும் - கொடிய
வாரிதியிலோடுங் கப்பல்

ஏறுவனை யெதிர்வினை பயிற்று வினையாலே
இன்ப துன்பச் சரக்கேற்றி வரு கப்பல்
கூறுமிடை நடுநாடி பிங்கலைகளென்ன
குலவு வளியொரு மூன்றிலே சுழலுங் கப்பல்

ஆதிபரா சக்தி அக்கான் பிடிக்க
ஆவரின்றீ தோரைவர் ஆஞ்சானிமுக்க
சோதியுற திரு நீல கண்ட கோமன்
சுற்றிவர வேலிட்ட வற்புதக் கப்பல்[16]

ஆணவமலம் அழிக்கப்படுவதற்கு பல புராண ஐதிகங்களை நாடகத்தினூடாக நினைவுபடுத்துகிறார்.

ஆணவத்தைசிவன் அடக்கியகதை
திரிபுரத் தோழரைச் சிரிப்பினிலெரித்தான்

ஒருதுணைக்காலனையுதைத்தயிரொழித்தான்
பழிப்பில் காமனைவழித்துடலெரித்தான்
மிடல்கெழுமுயலனைமிதித்துடல் நெளித்தான்[17].

புலவரின் சமூகஅக்கறை வெளிப்படும் இடமாக உலகப்போர் உலகப்போர் மூன்றால் உணவில்லை. அதனை எதிர்கொள்ளும் எந்தத் தயார்ப்படுத்தலும் நம்மிடையே இல்லை என மனம் வருந்தும் பகுதி காணப்படுகிறது. ஒரு சமூகம் தனது சுயத்தினை நேரும் அவலம் பின்வருமாறு பாடலாக்கப்பட்டள்ளது.

நீதியான நெசவுத் தொழிலை
நீங்கள் விடுத்த நேரந் தொடர்ந்து
வறுமை வந்தது. பெருமை நின்றது
அரசு போன்று. அடிமையானது
பெண்கள் தற்தொழில் விட்டுக் கெட்டனர்
ஆடைநெய்யுங்கள் பீடை போய்விடும்
இழந்த வாசியில் பெற்று
வளம் பெற வாழ்வார் வாய்மையீங் இதுவே[18]

**நிறைவுரை**

கருத்துருவமான நிலையிலுள்ள தத்துவங்கள் நாடகமாக பாத்திரங்களினால் உயிரூட்டப்பட்டு ஆற்றுகை செய்யப்படும் போது இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் என்பதற்கு உயிரிளங்குமாரன் எனும் நாடகம் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

19ம் நூற்றாண்டின் நிலைமாறுகாலம் காலணித்துவத்தின் பிரதானமான செல்வாக்கின் பெறுபேறு எனலாம் இத்தகைய நிலைமாறுகாலத்தில் ஒரு சமூகம் தனது அடையாளங்களை நிலைநிறுத்துவதற்கு கையாண்ட முயற்சிகளென்று தான் சைவ சித்தாந்தம் தொடர்பான கதையாடல்கள் இக்காலப்பகுதியில் முனைப்புப் பெறுவதற்கான பிரதானமான காரணியாக இருந்தது இந்நிலையில் பல்வேறு சமயங்கள் அறிமுகமாகிவிட்டநிலையில் சமயம் என்பதனை புலவர் புரிந்துகொண்டுள்ள முறைமை முக்கியமானது.

இந்நாடகம் ஒரு கல்வியியல் அரங்கு என்றவகையில் நாடகத்தினூடாக உரையாடல் சைவசித்தாந்தம் தொடர்பான தூண்டப்படுகிறது. இதில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவும் மனதில் படிமங்களாக நாடகம் முடிந்தவுடன் பார்வையாளரின் மனங்களில் நாடகம்பற்றிய உரையாடல் ஆரம்பமாகும். இத்தகைய உரையாடல்கள் மூலமாக சைவசித்தாந்தக் கருத்துகள் உரையாடப்படகின்றன. இத்தகைய நாடகத்தயாரிப்புகளை ஊக்கப்படுத்துவதும் இலத்திரனியல் சாதனங்களினூடாக இவை

வெளிப்பாடடைவதும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பரம்பலடைவதற்கு மிகவும் அவசியமாகும்.

உயிரிளங்குமரன் நாடகம் மரபுரிமையை வெளிப்படுத்தும் அரங்கு எங்களை நாங்கள் அவதானிப்பதற்கு இந்நாடகம் சந்தர்ப்பம் வழங்குகிறது. அத்துடன் ஒரு சமூகம் எவ்வாறு வாழக்கூடாது என்பதையும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் பண்பாட்டினடியாக கற்பனை செய்வதற்கான இடமாகவும் சந்தர்ப்பமாகவும் இவ்வரங்கு விளங்குகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. ஓலை. *2008* நாடகச்சிறப்பிதழ், கொழும்பு தமிழ்ச்சங்கம், ஆடி-ஆவணி, பக் *15*
2. *சேர். முத்துக்குமாரசுவாமி, 1864* அரிச்சந்திரா, இங்கிலாந்து, *1864*
3. V.Muthuthamby, *(1992)*, **Some Eminent Tamils writers and other Leading figures** (19th to 20th century), Department of h;induReligioud Affaris, Colombo, *ப 127*
4. *சோமசுந்தரப்புலவர்.க, 1936* உயிரிளங்குமரன் நாடகம். சுன்னாகம், *1936 பக் 03*
5. மேலது. *ப.107*
6. மேலது. *ப.42*
7. மேலது. *ப.76*
8. மேலது.
9. மேலது.
10. மேலது. *ப.90*
11. மேலது. *ப.23*
12. மேலது.
13. மேலது. *ப.114,115*
14. மேலது. *ப.30*
15. மேலது. *ப.55*
16. மேலது. *ப.22*
17. மேலது. *ப.28*
18. மேலது. *ப.116*